1990 ஆகஸ்ட் 20]

மற்ற மாநிலங்களைப் போல தமிழ்நாட்டிலிருந்து விளையாட்டு வீரர்களை உலக அளவிலே நடைபெறுகிற போட்டிகளிலே கலந்து கொள்கின்ற, தரமுள்ள வீரர்களை நம்மால் உருவாக்க முடிய வில்லை. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் அதை அமைக்க முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்வதோடு மேற்படி செயற்கை புல்தரையை அமைக்கின்றபோது, அதற்கு ஆகின்ற மொத்தச் செலவில் பாதித் தொகையை மத்திய அர சாங்கம் தருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புவதோடு....... (மணியடிக்கப்பெற்றது.) அந்தத் தொகையைப் பெற்று.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர் கதை யாக அல்லவா இருக்கிறது ! மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்து, தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் தங்களுக்கு நீண்ட கால குத்தகை கொடுத்தால், அதை ஏற்று நடத்தலாம் என்று தனியார் கழகம் மாநகராட்சிக்கு மனு செய்துள்ளது. தற்சமயம், மாநகராட்சியினுடைய கொள்கை, தங்களுக்கு இடங்கள் தேவைப்படுகிறபோது, யாருக்காவது, நீண்டகால குத்தகைக்குக் கொடுத்துவிட்டால், திரும்பப் பெற இயலவில்லை என்ற அடிப்படையில், நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தி வைத் திருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலையொட்டி, அவர்கள் மீண்டும் மனு செய்து, தற்போது 21-5-1990-ல் இது சம்பந்தமாக மாநகராட்சி அதி காரிகள், வருவாய்த்துறைச் செயலாளர், கல்வித்துறைச் செய லாளர், சென்னை விளையாட்டு மற்றும் பயிற்சி மைய அதிகாரிகள் ஆகியோருடன், தலைமைச் செயலாளர் அவர்கள் கலந்து பேசி, அதற்கான ஒரு முடிவை எடுக்கலாம் என்பதும், அதற் கிடையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கர்நாடக அரசின் அந்த டென்னிஸ் சங்கத்திற்கு மாநகராட்சியில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது சம்பந்தமாகவும், அவர்கள் செய் துள்ள இதர சலுகைகள் பற்றியும் ஆய்வுக்காக கேட்கப்பட்டு இருக்கிறது. அது கிடைத்தவுடன் பரிசீலிக்கப்படும்.

நடமாடும் நியாய விலைக் கடைகள்

*6887 திரு. கே. அர்ஜுனன் :
திரு. எஸ். டி. உசம்சந்த் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நடமாடும் ரேஷன் கடைகளை அமைக்க மைய அரசு மாநில அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைக்க மைய அரசு 7.5 லட்சம் ரூபாய் கடனும் 2.5 லட்சம் ரூபாய் மானியமும் வழங்கியுள்ளது.

11-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

வினா எண் 8059 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரித்தல்

*7622 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காத்தாடி ஆலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது என்று கருதுகிறது இந்த இடத்தில் நல்ல காற்று, விசையுடன் உள்ளது. உலக வங்கி அதிகாரிகள் இந்த இடத்தைப் பார்வையிட்டுள்ளனர். உலக வங்கியின் முடிவான பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS